திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 22.03.2026

## நேர்மறை எண்ணங்களின் பிரதிபலிப்பு..!

ஒரு நாட்டின் மன்னர், யானை மீதமர்ந்து நகர்வலம் சென்று கொண்டிருந்தார்.

அப்போது கடைத்தெருவில் ஒரு குறிப்பிட்ட கடை வந்த பொழுது மன்னர் அருகிலிருந்த மந்திரியிடம்...
“மந்திரியாரே. என்னவென்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், இந்தக் கடைக்காரரைத் தூக்கிலிட்டுக் கொன்று விடவேண்டும் என்று தோன்றுகிறது” என்றார்.

மன்னரின் பேச்சைக் கேட்ட மந்திரி அதிர்ந்து போனார். மன்னரிடம் விளக்கம் கேட்பதற்குள் மன்னர் அக்கடையைத் தாண்டி நகர்ந்து விட்டார்.

அடுத்த நாள் மந்திரி மட்டும் தனியாக அந்தக் கடைக்குச் சென்றார். அந்தக் கடைக்காரரிடம் சாதாரணமாகக் கேட்பது போல, “வியாபாரம் நன்றாக நடக்கிறதா?” என்று விசாரித்தார்.

அதற்கு கடைக்காரர் மிகவும் வருத்தமாக பதில் அளித்தார்.

“என் கடைக்கு வாடிக்கையாளரே யாரும் இல்லை. கடைக்கு நிறைய மக்கள் வருகின்றனர். சந்தனக் கட்டைகளை முகர்ந்து பார்க்கின்றனர். நல்ல மணம் வீசுவதாகப் பாராட்டக்கூட செய்கின்றனர். ஆனால், யாரும் வாங்குவதுதான் கிடையாது” என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னார் கடைக்காரர்.

அதன் பின் கடைக்காரர் சொன்னதைக் கேட்ட மந்திரி அதிர்ந்து போனார்.

“இந்த நாட்டின் அரசர் சாகும் நாளை எதிர்நோக்கியுள்ளேன். அரசர் இறந்து போனால், எப்படியும் எரிக்க நிறைய சந்தனக் கட்டைகள் தேவைப்படும். எனக்கும் நன்றாக வியாபாரம் நடந்து, என் கஷ்டமும் தீரும்” என்றார் கடைக்காரர்.

அதைக் கேட்ட மந்திரிக்கு முதல் நாள் அரசர் சொன்னதன் காரணம் என்னவென்று விளங்கியது. இந்தக் கடைக்காரரின் கெட்ட எண்ணமே, மன்னரின் மனதில் எதிர்மறை அதிர்வுகளை அவரை அறியாமல் உண்டாக்கி அப்படிச் சொல்ல வைத்தது என்று உணர்ந்தார் மந்திரி.

மிகவும் நல்லவரான அந்த மந்திரி இந்த விஷயத்தை நல்ல முறையில் தீர்க்க உறுதி பூண்டார்.

தான் யார் என்பதைக் காட்டிக் கொள்ளாமல், கடைக்காரரிடம் கொஞ்சம் சந்தனக் கட்டைகளை விலைக்கு வாங்கினார்.

அதன் பின் மந்திரி அந்தக் கட்டைகளை எடுத்துச் சென்று அரசரிடம், நேற்று அரசர் சொன்ன அந்த சந்தன மரக் கடைக்காரர், அரசருக்கு இதைப் பரிசாக வழங்கியதாகக் கூறி சந்தனக் கட்டைகளை அரசரிடம் தந்தார்.

அதைப் பிரித்து அந்தத் தங்க நிறமுள்ள சந்தனக் கட்டைகளை எடுத்து முகர்ந்த அரசர் மிகவும் மகிழ்ந்தார். அந்தக் கடைக்காரரைக் கொல்லும் எண்ணம் தனக்கு ஏன் வந்ததோ... என்று வருந்தினார்.

அரசர் அந்தக் கடைக்காரருக்கு சில பொற்காசுகளைக் கொடுத்து அனுப்பினார்.

அரசர் கொடுத்தனுப்பியதாக தன்னிடம் வந்த பொற்காசுகளைப் பெற்றுக் கொண்ட கடைக்காரர் அதிர்ந்து போனார். அந்தப் பொற்காசுகளால் அவரது வறுமை தீர்ந்தது.

இவ்வளவு நல்ல மனம் கொண்ட அரசரைத் தன்னுடைய சுயநலத்துக்காக இறக்க வேண்டும் என்று தான் எண்ணியதற்கு மனதுக்குள் மிகவும் வெட்கப்பட்டு வருந்தினார் கடைக்காரர். அத்துடன் அந்த கடைக்காரர் மனம் திருந்தி நல்லவராகவும் மாறினார்.

நாம் அடுத்தவர்கள் மேல் நல்ல... அன்பான... எண்ணங்களை வைத்திருந்தால் அந்த நேர்மறை எண்ணங்கள் நமக்கு வேறு ஏதேனும் வழியில் நல்லவைகளாகத் திரும்பி வரும்.

மாறாக, நாம் அடுத்தவர் மேல் கெடுதலான எண்ணங்களைக் கொண்டிருந்தால், அதே எண்ணம் நம் மேல் கெடுதலான வழியில் திரும்பவும் வந்து சேரும்.

நாம் எதை தேடுகிறோமோ... அதுவே கிடைக்கும்.

நாம் எதை நினைக்கிறோமோ... அதுவே நடக்கும்.

எனவே..

நல்லதை நினைப்போம்...
நல்லதைப் பேசுவோம்...
நல்லதைச் செய்வோம்...
நல்லது தானாக வரும்.